

## அதிக விபத்து ஏற்படும் இடங்கள் அருகே உள்ள கடைகளில் உள்ளவர்களுக்கு முதலுதவி பயிற்சி

# பெண்களுக்கு பொது இடங்களில் பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தவேண்டும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 18–

"பெண்களுக்கு பொது இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதை தலையாய கடமையாக கொண்டு செயல்பட வேண்டும்" என உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (17–ந் தேதி) தலைமைச் செயலகத்தில் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயல்பாடுகள் குறித்தும், துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், புதியதாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் காவல்துறையின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார். காவல்துறை என்பது, குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத் தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கும் துறையாக செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

### பெண்களுக்கு பாதுகாப்பு

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை களைந்திட கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பெண்களுக்கு பொது இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதை தலையாய கடமையாக கொண்டு செயல்படவேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், காவலர்களுக்கான சலுகைகள், விடுப்புகள், வீட்டுவசதிக்கான வழிமுறைகளை மேம்படுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

தடய அறிவியல் துறையின் செயல்பாடுகளான தடயங்களை கண்டறிய, சேகரிக்க குற்ற நிகழ்விடத்தில் தடய ஆய்வு செய்தல், குற்ற சான்றுப் பொருட்களை ஆய்வு செய்தல், குற்றம் புரிந்தவரை கண்டறிவதில் காவல் துறைக்கு உதவி புரிதல், தடய அறிவியல் ஆய்வறிக்கை குறித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தல், காவல் துறை, நீதித் துறை மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு தடய அறிவியல் குறித்த பயிற்சி அளித்தல் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

பேரிடர் காலங்களில் மக்களுக்கு உறுதுணையாக இருக்கும் தீயணைப்பு துறைக்கு தேவையான பயிற்சிகளையும், உபகரணங்களையும் தயார் நிலையில் வைத்து சேவையாற்றிட வேண்டும் என்றும், பொதுமக்களுக்கும் தீ தடுப்பு நடவடிக்கைகளை பயிற்றுவித்து தீ விபத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

சாலை பாதுகாப்பு, அதிக விபத்து ஏற்படும் கரும்புள்ளி பகுதிகளை கண்டறிந்து அவற்றை சரிசெய்யும் பணிகளை துரிதப்படுத்துதல், முக்கிய சாலைகளில் சாலைப் பாதுகாப்பை தணிக்கை செய்து அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுத்தல், சாலைகள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் பாதசாரிகளின் பாதுகாப்பிற்காக நடைபாதைகளை ஏற்படுத்துதல், வட்டார போக்குவரத்து அலுவலகம், ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளில் மாதிரி வாகன பயிற்சி வடிவம் வழங்குதல் மற்றும் அதற்கான பயிற்சியை மேம்படுத்துதல் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

### கடைக்காரர்களுக்கு முதலுதவி பயிற்சி

மேலும், சாலை பாதுகாப்பை வலுப்படுத்திட தகவல் மேலாண்மை மையம்ஏற்படுத்திட வேண்டும் என்றும், விபத்துகள் நடந்த இடங்களை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்திடவும், அதிக வாகன விபத்துகள் ஏற்படும் இடங்களுக்கு அருகாமையில் உள்ள கடைகள், உணவகங்களில் உள்ள நபர்களுக்கு முதலுதவி செய்யும் முறைகள் குறித்து பயிற்சி அளித்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பள்ளி மாணவ, மாணவியருக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நீதிமன்றங்களுக்கு வரும் 5 ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் கட்டவும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

சிறைகளின் பாதுகாப்பு, மத்திய சிறைகள், மாவட்ட சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், கிளைச் சிறைகள், பாஸ்டல் பள்ளிகள், திறந்த வெளிச்சிறைகள் ஆகியவற்றின் இடவசதி மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் தோட்ட உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய அமைக்கப்பட்டுள்ள சிறை அங்காடியின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர், இப்பணியினை நன்கு விரிவுப்படுத்த கேட்டுக் கொண்டார்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் மது அருந்துதல் மற்றும் போதை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணாக்கர்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலம் மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுப் பேரணி, கருத்தரங்குகள், தெரு நாடகங்கள் போன்றவற்றை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தினார்.

### கள்ளச் சாராயம்

மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை முற்றிலும் ஒழித்திட வேண்டும் என்றும், போலி மதுபானம் தயாரிப்பு, எரிசாராயம் கடத்தி விற்பனை செய்வது, பிறமாநில மதுபான வகைகளை கடத்தி விற்பனை செய்வது ஆகியவற்றை தடுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தினார். மேலும், மனம் திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு நிதி அளிப்பது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், போக்குவரத்து ஆணையர் சந்தோஷ் கே.மிஸ்ரா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் ஜெ.ஜெயகாந்தன், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் இல.சுப்ரமணியன், காவல்துறை தலைமை இயக்குநர் செ.சைலேந்திரபாபு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் கரன் சின்கா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைத் தலைவர் சுனில்குமார் சிங், பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) எம்.ரவி, காவல்துறை கூடுதல் இயக்குநர் (தலைமையகம்) கே. சங்கர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்) பி.தாமரைக்கண்ணன், குற்றவியல் தொடர்வு இயக்குநர் சித்ராதேவி, தடய அறிவியல் துறை இயக்குநர் சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொதுத்தேர்வு முடிவில் புதிய நடைமுறை

# தசம எண் அடிப்படையில் பிளஸ்–2 மதிப்பெண்கள்:நாளை வெளியாகிறது

சென்னை, ஜூலை.18

பிளஸ்–2 பொதுத்தேர்வு முடிவு வெளியிடுவதில் புதிய நடைமுறையை அரசு தேர்வுத்துறை கொண்டு வந்திருக்கிறது. அதன்படி, தசம எண் அடிப்படையில் மதிப்பெண்கள் நாளை (திங்கட்கிழமை) வெளியிடப்படுகிறது என்று பள்ளி கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா காரணமாக மாணவர்களின் நலன் கருதி பிளஸ்–2 பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. மாணவர்களுக்கான தேர்வு மதிப்பெண் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வில் 50 சதவீதம், பிளஸ்–1 தேர்வில் 20 சதவீதம், பிளஸ்–2 மதிப்பெண் செய்முறை, உள்மதிப்பீடு அடிப்படையில் 30 சதவீதம் என மொத்தம் 100 சதவீதத்துக்கு கணக்கிடப்பட்டு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான பணிகளில் தேர்வுத் துறையும், கல்வித்துறையும் ஈடுபட்டன.

மாணவர்களுக்கான மதிப்பெண் கணக்கிடும் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று, இணையதளத்தில் பதிவேற்றமும் செய்யப்பட்டுவிட்டதாக கூறப்பட்டது. அதன்படி, நாளை (திங்கட்கிழமை) பிளஸ்–2 தேர்வு முடிவு வெளியிடப்பட இருப்பதாக நேற்று முன்தினம் அரசு தேர்வுத்துறை அறிவித்தது. அதற்கான இணையதள முகவரிகளையும் நேற்று வெளியிட்டது.

வழக்கமாக ஒவ்வொரு தேர்வு முடிவும் முழு மதிப்பெண்களாக கணக்கிடப்பட்டுதான் வழங்கப்படும். ஆனால் இந்த முறை எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்1, பிளஸ்2 மதிப்பெண்களை கணக்கிடும்போது தசம அடிப்படையில் என்ன மதிப்பெண்கள் வருகிறதோ அதை அப்படியே மாணவர்களுக்கு வழங்க அரசு தேர்வுத்துறை முடிவு செய்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உதாரணமாக, பிளஸ் 2 வகுப்பு இயற்பியல் பாடத்தில் ஒரு மாணவரின் முந்தைய மதிப்பெண்களின் கூட்டுத் தொகை 68.58 என வருகிறது என்றால், அந்த மாணவருக்கு 69 என்று முழுமையாக்காமல், 68.58 என்று தசம அடிப்படையில் கிடைக்கும் மதிப்பெண் இரட்டை இலக்கத்தில் அப்படியே வழங்கப்படும்.

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில், குறிப்பாக என்ஜினீயரிங் கலந்தாய்வு போன்றவற்றுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கும் போது, அவர்களின் கட் ஆப் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை வழங்கப்படும். கட் ஆப் கணக்கீட்டின்போது எந்த ஒரு மாணவரும் பாதிப்படைவதைத் தவிர்க்கவும், குழப்பமின்றி உயர்கல்வி மாணவர் சேர்க்கையை நடத்தவும் ஏதுவாக புதிய நடைமுறையின் மூலம் மதிப்பெண்கள் வழங்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 70 நாட்களில் 1 கோடியே 13 லட்சம் போடப்பட்டுள்ளன

# வழங்கப்பட்ட தடுப்பூசிகளை விட கூடுதலாக தடுப்பூசி போட்ட மாநிலம் தமிழகம்

## எடப்பாடிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்

சென்னை, ஜூலை.18

தமிழகத்துக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளை விட கூடுதலாக தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது என பிரதமர் மோடி பாராட்டி உள்ளார் என்று எடப்பாடி பழனிசாமிக்கு, மா.சுப்பிரமணியன் பதில் அளித்துள்ளார்.

சென்னை மீனம்பாக்கத்தில் நிருபர்களை சந்தித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் தடுப்பூசி இதுவரை எவ்வளவு வந்துள்ளது, எத்தனை பேருக்குதடுப்பூசி போடப்பட்டுள்ளது, எவ்வளவு தடுப்பூசிகள் வீணானது, என்ற விவரங்களை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கேட்டுள்ளார். தமிழகத்தில் தினந்தோறும் தடுப்பூசிகளின் அளவு, பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை குறித்து செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்து பகிரப்பட்டு வருகிறது. ஆனால் என்ன காரணமோ? இதை எதையும் பார்க்காமல், மீண்டும் வெள்ளை அறிக்கை கேட்கிறார். வெள்ளை அறிக்கை தருவது எங்களது கடமையும் கூட.

### 7 லட்சத்து 15 ஆயிரம்

தடுப்பூசிகள் கையிருப்பில்...

இதில் அரசியல் செய்யக்கூடாது என நாங்கள் நினைத்தோம். ஆனால் வேறு வழியே இல்லை. வெள்ளை அறிக்கை அவரே கேட்பதால், கடந்த கால மருத்துவத்துறையின் செயல்பாட்டை அவரே அறிந்து கொள்ள வேண்டும் என விரும்புவதால், அதை சொல்லுவது அவசியமானது. தமிழகத்துக்கு இதுவரை 1 கோடியே 80 லட்சத்து 32 ஆயிரத்து 170 தடுப்பூசிகள் வந்துள்ளன. அதில் 1 கோடியே 76 லட்சத்து 19 ஆயிரத்து 174 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. கையிருப்பில் 7 லட்சத்து 15 ஆயிரத்து 570 தடுப்பூசிகள் உள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 16ந்தேதிதான் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டது. அந்தவகையில் ஜனவரி 16ந்தேதி முதல் மே 7ந்தேதி வரை, அதாவது எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த அந்த 103 நாட்களில் 63 லட்சத்து 28 ஆயிரத்து 407 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. அதன்படி அவரது ஆட்சியில் தினசரி ஒரு நாளைக்கு சராசரியாக 61 ஆயிரத்து 441 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன.

இதையடுத்து தி.மு.க ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தீவிர நடவடிக்கையாலும், தமிழக மக்களிடம் ஏற்படுத்தி உள்ள விழிப்புணர்வு காரணமாகவும், தற்போது தமிழகத்தில் தினசரி தடுப்பூசி போட்டுக்கொள்பவர்களின் சராசரி எண்ணிக்கை 1 லட்சத்து 61 ஆயிரத்து 297 ஆக உள்ளது.

### 1 கோடியே 12 லட்சம் தடுப்பூசிகள்

அந்தவகையில் 70 நாட்களில் 1 கோடியே 12 லட்சத்து 90 ஆயிரத்து 767 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. அண்ணா தி.மு.க ஆட்சியில் இருந்தபோது தமிழகத்தில் தடுப்பூசி தட்டுப்பாடு இல்லை. மத்திய அரசிடம் எவ்வளவு தடுப்பூசி கேட்டிருந்தாலும், கொடுப்பதற்கு தயாராகவே இருந்தது. அந்தவகையில் அவர்களிடம் கூடுதலாகவே தடுப்பூசி கேட்டு, இன்னும் கூடுதலாகவே தடுப்பூசியை செலுத்தியிருக்கலாம்.

அதில் அண்ணா தி.மு.க அரசு கவனமே செலுத்தவில்லை. ஆனால் தி.மு.க ஆட்சி பொறுப்பேற்றதும், வருகிற தடுப்பூசியை அரை மணி நேரம் கூட தாமதிக்காமல், மாவட்டந்தோறும் பிரித்து அனுப்பி தடுப்பூசி போடும் பணியை தீவிரமாக செய்து வருகிறோம். எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி விரும்பினால், மாவட்டந்தோறும் தடுப்பூசி விவரங்களை வெள்ளை அறிக்கையாக தர தயாராக இருக்கிறோம். அண்ணா தி.மு.க ஆட்சியில் 6 சதவீத தடுப்பூசி வீணாக்கப்பட்டது. அதன்படி 4 லட்சத்து 34 ஆயிரத்து 838 தடுப்பூசிகள் அடங்கும். தடுப்பூசி மருந்து குப்பிகளில் 5 மி.லி.க்கு பதிலாக, 'ஓவர் பில்லிங்' முறையில் 5.6 மி.லி. என்ற அளவில் தற்போது இருந்து கொண்டிருக்கிறது.

அதன்படி ஒவ்வொரு குப்பிகளிலும் 16 முதல் 26 சதவீதம் வரை கூடுதலாக மருந்துகள் வருகிறது. அந்த வகையில் 7 லட்சத்து 36 ஆயிரம் 'டோஸ்கள்' கூடுதலாக போடப்படுள்ளன. கூடுதலாக வந்ததன் விளைவு, கடந்த ஆட்சியில் வீணாக்கப்பட்டதையும் சேர்த்து கூடுதலாக 3 லட்சத்து 2 ஆயிரத்து 70 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. அதேபோல் பாரதீய ஜனதாவை சேர்ந்த குஷ்பு ஒரு தொலைக்காட்சியில் ஜூன் மாதத்தில் மட்டும் 5 லட்சம் தடுப்பூசிகள் வீணானதாக பொய்யான தகவலை சொல்லியிருக்கிறார். இந்த துறையின் செயல்களை தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

### பிரதமர் பாராட்டு

6 மாநில முதலமைச்சர்களுடன் நடந்த பிரதமரின் காணொலி காட்சி கூட்டத்தில், இந்தியாவிலேயே, கொடுக்கப்பட்ட தடுப்பூசிகளை விட கூடுதலாக தடுப்பூசி போட்ட மாநிலம் தமிழகம் தான் என பிரதமர் பாராட்டி உள்ளார்.

அண்ணா தி.மு.க எதிர்க்கட்சி தலைவர் விரும்பினால், அவரது முன்னிலையிலேயே வெள்ளை அறிக்கை தர தயாராக இருக்கிறேன்.

அவர்களே கேட்ட பிறகு வெள்ளை அறிக்கையை சட்டமன்றத்திலும், மகிழ்ச்சியுடன் கொடுக்க தயாராக இருக்கிறோம். இந்த வாய்ப்பைதான் நாங்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அறிவித்தப்படி தடுப்பூசிகள் அட்டவணை போட்டு அனுப்பி கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கத்தின் சார்பில் அதன் நிறுவனத் தலைவர் பி.டி. அரசகுமார், மாநிலத் தலைவர் செங்கோட்டையன், பொதுச் செயலாளர் பழனியப்பன் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினர். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உடனிருந்தார்.

# தமிழகத்தில் நேற்று 2,205 பேருக்கு கொரோனா

## சென்னையில் 137 பேர் பாதிப்பு

சென்னை, ஜூலை.18

தமிழகத்தில் நேற்று 2,205 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 44 ஆயிரத்து 880 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 1,270 ஆண்கள், 935 பெண்கள் என மொத்தம் 2 ஆயிரத்து 205 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக கோவையில் 241 பேரும், தஞ்சாவூரில் 152 பேரும், ஈரோட்டில் 143 பேரும், சேலத்தில் 163 பேரும், சென்னையில் 137 பேரும், திருப்பூரில் 132 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சமாக பெரம்பலூரில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை 3 கோடியே 45 லட்சத்து 52 ஆயிரத்து 523 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் 25 லட்சத்து 33 ஆயிரத்து 323 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு அரசு மருத்துவமனையில் 30 பேரும், தனியார் மருத்துவமனையில் 13 பேரும் என 43 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். நேற்று மட்டும் 20 மாவட்டங்களில் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது. 18 மாவட்டங்களில் உயிரிழப்பு இல்லை. தமிழகத்தில் இதுவரை 33 ஆயிரத்து 695 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து 2,802 பேர் நேற்று 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் 24 லட்சத்து 71 ஆயிரத்து 38 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 28 ஆயிரத்து 590 பேர் உள்ளனர்.

தமிழகத்தில் நேற்று 39 ஆயிரத்து 665 ஆக்சிஜன் படுக்கைகள், 25 ஆயிரத்து 993 ஆக்சிஜன் வசதி அல்லாத சாதாரண படுக்கைகள், 7 ஆயிரத்து 440 ஐ.சி.யு. படுக்கைகள் என மொத்தம் 73 ஆயிரத்து 98 படுக்கைகள் ஆஸ்பத்திரிகளில் காலியாக உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதுவையில் கொரோனாவுக்கு 2 பேர் பலி

பாண்டிச்சேரி, ஜூலை 18–

கொரோனாவுக்கு புதுவையில் 2 ஆண்கள் பலியானார்கள். இதில் ஒருவர் தமிழரசு, வயது 62. மகாவீர் நகர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர். இன்னொருவர் வேணுகோபால், வயது 69. மாவோவைச் சேர்ந்தவர்.

கொரோனா தொற்று பாதித்த பாண்டிச்சேரியில் 100 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 75 பேர் பாண்டிச்சேரியையும், 14 பேர் காரைக்காலையும், ஒருவர் ஏனாமையும், 10 பேர் மாவோவையும் சேர்ந்தவர்கள். கொரோனா தொற்று காரணமாக 7 குழந்தைகள் கதிர்காமம் மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண். 150/2021**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXXIX/1925 தொடர்பான மனுவில் 12.08.2017 அன்று இறந்து போன கண்ணம்மாள் என்கிற சின்னக்கண்ணு அவர்களின் உயில் சாசனம் தொடர்பான மனு

1) R. அனந்தன், த/பெ. லேட் C.ராமசாமி,
2) P. குமரன், த/பெ. லேட் C.பட்டாபி,
3) P. சரவணன், த/பெ. லேட் C.பட்டாபி,
1 முதல் 3 வரை உள்ளவர்களின் வசிப்பிடம் எண்.103, மாம்பலம் ஹை ரோடு, தி.நகர், சென்னை–600 017. ...மனுதாரர்

எதிர்

E. பழனிவேல், த/பெ.லேட்.ஏழுமலை, வசிப்பிடம் பழைய எண்.51, புதிய எண்.C–2, AGS காலனி, நங்கநல்லூர், சென்னை–600 061. ...எதிர்மனுதாரர்

சென்னை–17,தி.நகர், மாம்பலம் ஹை ரோடு, 103, சென்னை–600 017, என்ற இடத்தில் வசித்து வந்து கடந்த 12.08.2017 அன்று இறந்து போன கண்ணம்மாள் என்கிற சின்னக்கண்ணு அவர்களின் உயில் சொத்துக்கள் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 17.08.2021 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரி உயில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2021ம் வருடம் ஜூலை மாதம் 13ந் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது

**R. இரவி, S.சரத்குமார்,**
**மனுதாரர்களின் வழக்கறிஞர்கள்**
**எண்.462, சட்ட அறை, 4வது தளம்,**
**சென்னை உயர்நீதிமன்றம்,**
**சென்னை– 600 104**

**பொ. சாந்தினி ஜேஸ்மின்**
**உதவி பதிவாளர்**
**முதலேற்பு பிரிவு– 1**
**உயர்நீதிமன்றம்**
**சென்னை– 600 104**



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

தி ஒபராய் குழும உறுப்பினர்

CIN: L92490TN1983PLC009903

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.

Ph: +91-44-2234 4747, Fax: + 91-44-2234 6699

Website: www.eihassociatedhotels.in

**அறிவிப்பு**

அசல் பங்கு சான்றிதழ் காணாமல் போய்விட்டதாகவும்/தவறி விட்டதாகவும் பங்குதாரர் தெரிவித்துள்ளதால், நகல் பங்கு சான்றிதழ் வழங்கக் கோரி நிறுவனத்தின் பின்வரும் பங்குதாரரிடமிருந்து கோரிக்கையை நிறுவனம் பெற்றுள்ளது என்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரருக்கு நகல் பங்கு சான்றிதழ் வழங்குவதற்கு எதிராக எந்தவொரு உரிமை கோரலும் பிரதிநிதித்துவமும் உள்ள எந்தவொரு நபரும் இந்த அறிவிப்பை வெளியிட்ட 7 நாட்களுக்குள் நிறுவனத்திற்கு எழுத வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் அவர்களுக்கு உரிமை உரிமை கோரல் அல்லது ஆட்சேபணை இல்லை என்று கருதப்படும், மேலும் சட்டப்படி பங்குதாரருக்கு நகல் பங்கு சான்றிதழை வழங்கும் பணியை நிறுவனம் மேற்கொள்ளும் மற்றும் அசல் பங்கு சான்றிதழ், அதன் பின்னர், ரத்து செய்யப்படும்:

| பெயர் | போலியோ எண் | சான்றிதழ் எண் | குறியீடு எண்கள் | | பங்குகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | From | To | |
| திரு. ஹர்ஷத் லால் முல்சந்த் ஷா | 000599 | 0009493 | 003163665 | 003163764 | 100 |

**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக**

தேதி: 16 ஜூலை, 2021
இடம்: கொல்கத்தா

ஒப்பம்/– இந்த்ராணி ரே
**கம்பெனி செயலாளர்**